

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நடைபெற்ற மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் அமைச்சரும், மாவட்டச் செயலாளருமான கே.ஆர். பெரியகருப்பன் பேசினார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், அவைத்தலைவர் அ.கணேசன், மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், காரைக்குடி மேயர் எஸ். முத்துதுரை, துணை மேயர் என்.குணசேகரன் ஆகியோர் உள்ளனர்.

### முதலமைச்சரின் பெருந்தன்மையான கோரிக்கையை ஏற்று - வெளியேற்றப்பட்ட

# அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளில் பங்கேற்கலாம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு அனுமதி!

சென்னை, ஜூலை 22 -

சட்டப்பேரவையில் அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்பட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள் கூண்டோடு வெளியேற்றப்பட்டனர். தொடர்ந்து முதலமைச்சர் பெருந்தன்மையுடன் விடுத்த கோரிக்கையை ஏற்று அவர்கள் அனைவரும் அவை நடவடிக்கைகளில் பங்கேற்க பேரவைத் தலைவர் மு.அப்பாவு அனுமதி வழுங்கினார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது கள்ளக்குறிச்சி விவகாரத்தை எழுப்பி அ.தி.மு.க உறுப்பினர்கள் கூச்சலிட்டனர். கேள்வி நேரத்திற்கு பின்னர் கவன ஈர்ப்பு தீர்மானம் மீது விவாதம் நடத்த அனுமதி அளிக்கப்படும் என்று பேரவைத் தலைவர் அறிவித்த பின்னரும், அ.தி.மு.க.வினர் அதனை ஏற்காமல் அவையில் அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டனர்.

இதையடுத்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் பேரவையில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அவையின் மாண்புக்கு எதிராக அ.தி.மு.க.



உறுப்பினர்கள் செயல்பட்டதால் அவர்கள் வெளியேற்றப்பட்டதாக பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து சட்டப்பேரவையில் பேசிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், கள்ளக்குறிச்சி விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்க தான் உத்தரவிட்டு இருப்பதாக தெரிவித்தார். அ.தி.மு.க.வினர் திட்டமிட்டு நாடகத்தை அரங்கேற்றி உள்ளதாகவும், விதிகளுக்கு, மரபுகளுக்கு மாறாக அ.தி.மு. கவினர் நடந்து கொண்டுள்ளதாகவும் முதலமைச்சர் கூறினார். ஜனநாயக முறையில் சட்டமன்றம் நடைபெற வேண்டும் என்பதில் தான் உறுதியாக உள்ளதாக கூறிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் பிரதான எதிர்க்கட்சியினர் பங்கேற்கும் வகையில் அவர்கள் மீதான நடவடிக்கையை ரத்து செய்து அவை நடவடிக்கைகளில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என்று பேரவைத் தலைவரிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்று வெளியேற்றப்பட்ட அ.தி.மு.க உறுப்பினர்கள் அனைவரும் அவை நடவடிக்கைகளில் பங்கேற்க அனுமதி அளித்து பேரவைத் தலைவர் அப்பாவு உத்தரவிட்டார். பெருந்தன்மையோடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அ.தி.மு. கவினரை அவை நடவடிக்கைகளில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்ததை பேரவைத் தலைவர் அப்பாவு ஏற்றுக்கொண்ட நிலையில், முதலமைச்சரின் பெருந்தன்மையை அ.தி.மு.க.வினர் புரிந்து கொள்ளாமல் அவை நடவடிக்கைகளில் பங்கேற்காமல் புறக்கணித்துள்ளனர்.

# மீனவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் போராட்டம்!

## புதுவை மாநில எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா எச்சரிக்கை!

புதுவை, ஜூன் 22 -

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகிறோம் என்று கூறி புதுச்சேரி அரசு ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட்டில் மீனவர்களை கவரும் வகையில் பல்வேறு அறிவிப்புகளை வாசிப்பதை வாடிக்கையாக கொண்டுள்ளதை மீனவர்கள் நன்கு அறிவர். அந்த வகையில், 70 வயதிலிருந்து 79 வயதுடைய மீனவ முதியோர்களின் நலன் கருதி முதியோர் உதவித்தொகை ரூ. 3 ஆயிரத்திலிருந்து ரூ. 3 ஆயிரத்து 500 வழங்கப்படும். புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலுள்ள மீனவ கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி குடியிருப்பு பகுதிகளில் அடிப்படை வசதிகளான குடிநீர், சாலை மற்றும் வடிகால் வசதிகளை மேம்படுத்த சட்டமன்ற தொகுதிக்கு ஒரு கிராமம் வீதம் 13 மீனவ கிரா மங்களில் கிராமம் ஒன்றிற்கு ரூ. 1 கோடி செலவு செய்யப்படும். சென்டாக் மூலம் தேர்வு செய்யப்பட்டு மேற்படிப்பு படிக்கும் மீனவ மாணவர்களுக்கு புதுச்சேரி ஆதிதிராவிடர் நலத்துறைக்கு இணையாக நிதியுதவி வழங்கப்படும்.

500 விசைப்படகு உரி



மையாளர்கள் பயன்பெறும் வகையில் ஒன்றிய அரசின் தி ட்டத்தில் தொலைதொடர்பு சாதனப் பொருட்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் வாங்க ரூ. 1 கோடி அளிக்கப்படும். உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை மேம்படுத்த 200 ஹெக்டேர் அளவு உள்ள ஏரிகளில் விரல் அளவு மீன்குஞ்சிகளை இருப்பு செய்ய 2 லட்சம் மீன் குஞ்சிகள் வாங்கப்படும். ஒன்றிய அரசின் திட்டத்தின் கீழ் ஆழ்கடல் மீன்பி டிப்பை ஊக்குவிக்க மூன்று பயனாளிகளுக்கு ரூ. 2 கோடியே 16 லட்சம் மானியம் வழங்கப்படும்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கடல்பாசி வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். புதுச்சேரி கடற்கரை பகுதியில் ரூ. 40 லட்சம் மதிப்பீட்டில் சுனாமி நினைவிடம் கட்டப்படும். முன் மாதிரி மீனவ கிராமம் அமைக்கப்படும். நடப்பாண்டில் மீனவர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் 100 சதவீதம் வழங்கப்படும். மீனவ மகளிருக்கு நிதி அதிகாரம் அளிக்கும் பொருட்டு மீனவ மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ. 1 லட்சம் என ஆண்டிற்கு 50 சுய உதவிக் குழுக்கள் பயன்பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

அரியாங்குப்பம் ஆறு தூர்வார பூர்வாங்க பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இயற்கை சீற்ற காலங்களில் மீனவர்களின் மீன்படி சாதனங்கள், உபகரணங்கள் மற்றும் பல்வேறு இழப்புகளுக்கு காலத்தோடு நிவாரணம் வழங்கும் பொருட்டு ஒரு புதிய திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும் என கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டது. ஆனால் அவை அனைத்தும் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

அதேபோல், மீனவ மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கடல் அரிப்பை தடுக்கவும், படகுகளின் பாது காப்பை உறுதிச் செய்யவும் தூண்டில் முள் வளைவு அமைக்கப்படும் என்ற அறிவிப்பும் கிடப்பில் உள்ளது. மீனவ கிராமங்களில் கடல்நீர் உட்புகுவது சமீப காலமாக அதிகரித்து வருகிறது. இதனால் கடற்கரையோரம் வசிக்கும் மீனவ மக்கள் அச்சத்துடன் வாழும் சூழல் உள்ளது. இதுகுறித்து விரிவான ஆய்வு நடத்தி, புதுச்சேரி, காரைக்கால் கடலோர கிராமங்களின் கரையோரங்களில் வசிக்கும் மீனவர்கள் மற்றும் அவர்களின் வீடுகளை காப்பாற்றும் வகையில் கிராமைனட் கல் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டும். மீனவர்களுக்கான கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இரண்டு சதவிதமாய் இருப்பதை உயர்த்தி வழங்கிட வேண்டும். பல ஆண்டுகாலமாக நடத்தப்படாமல் உள்ள உலக மீனவர் தின விழாவை நடப்பாண்டில் நடத்திட வேண்டும் போன்ற முக்கிய பிரச்சினைகள் குறித்து அரசு கவனம் செலுத்தாமல் இருப்பது வருத்தம் அளிக்கக் கூடியதாக இருக்கிறது.

அதேபோல், தடைக்காலத்தில் வழங்க வேண்டிய நிவாரண உதவித் தொகை மீன்பிடி தடைக்காலம் முடிந்து மிகவும் காலதாமதமாக வழங்குவது என்பது ஆட்சியாளர்களின் அலட்சியத்தையே காட்டுகிறது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும். இனிவரும் காலங்களில் மீனவர்களுக்கு காலத்தோடு உதவித் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல், அண்டை மாநிலமான தமிழகத்தில் மீன்பிடி தடைக்கால நிவாரணம் ரூ. 8 ஆயிரத்து 500 வழங்குவதுபோல் புதுச்சேரி அரசும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதுச்சேரி அரசு மீனவர்களுக்கு புதியதாக எதையும் செய்ய தேவையில்லை. அவர்களுக்கு இந்த அரசு சொன்னதை செய்தால் போதும். மீனவர்களுக்கு அரசு மேற்சொன்ன வாக்குறுதிகளை நடப்பாண்டில் நிறைவேற்றாவிட்டால் புதுச்சேரி மீனவர்களை ஒன்று திரட்டி தி.மு.க. மீனவர் அணி சார்பில் போராட்டம் நடத்தப்படும் என்பதை எச்சரிக்கையாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு புதுவை மாநில எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தெரிவித்துள்ளார்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஒன்றியம் சூராணத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாளை முன்னிட்டு ஒன்றிய செயலாளர் வே.தமிழ்மாறன் தலைமையில் கழக நிர்வாகிகள் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### விக்கிரவாண்டி தொகுதியில் - கழகத்தின்

# வெற்றிக் கனியை முதல்வரிடம் ஒப்படைக்க தீவிரப் பிரச்சாரம்!

## கழக விவசாய அணிக் கூட்டத்தில் தீர்மானம்!

விழுப்புரம், ஜூன் 22 -

“விக்கிரவாண்டி தொகுதியில் கழகத்தின் வெற்றிக் கனியை முதல்வர் மு.க. ஸ்டாலினிடம் ஒப்படைக்க தீவிரமாகப் பாடுபடுவோம்” என்று கழக விவசாய அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 20.6.2024 வியாழக்கிழமை மாலை 3.00 மணி அளவில் விழுப்புரத்தில் உள்ள “கலைஞர் அறிவாலயத்தில்” தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே. எஸ்.விஜயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநில தி.மு.க. விவசாய அணி இணைச் செயலாளர்கள் கள்ளிப்பட்டி மணி, பா.செந்தமிழ்செல்வன், குறிஞ்சி என்.சிவகுமார் துணைச் செயலாளர்கள் ஆர்.டி.ஏ.ஆதிசேஷன், தஞ்சை ஜித்து (எ) ராஜரத்தினம், மதுரை கணேசன், டி.எம்.அரியப்பன், பி.குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவரும் - இந்திய அரசியலின் மூத்த தலைவராகவும் - கலை, இலக்கியம், பத்திரிக்கை என அனைத்து துறைகளையும் தன் வசப்படுத்தி வரலாற்று சாதனை படைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை தி.மு.க. விவசாய அணியின் சார்பாக மாநிலம் முழுவதும் உள்ள விவசாய அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்க ளின் ஆலோசனைகளைப் பெற்று, திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர் அவர்களின் அறிவிப் பின்படி ஏழையெளியோர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் மிகச் சிறப்பாக நடத்திட வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், இந்திய துணைக் கண்டமே வியந்து நோக்கும் வண்ணம் தமிழ்நாட்டில் உள்ள 40 தொகுதிகளிலும் “இந்தியா கூட்டணி” வேட்பாளர்கள் அதிக வாக்கு வித்தியாசத்தில் மாபெரும் வெற்றிபெற வியூகம் அமைத்ததோடு, தீவிர பிரச்சாரம் செய்து, அவ்வெற்றிக்கு பாடுபட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு தி.மு.க. விவசாய அணியின் மாநில நிர்வாகிகளின் இக்கூட்டம் தனது மனமார்ந்த பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி வாரியாக பிரச்சாரம் செய்து, பாசிச பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை படுதோல்வி அடையச் செய்ததோடு மட்டுமல்லாமல், இந்தியா கூட்டணி வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்திட, பாடுபட்ட தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும் - விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தி.மு.க. விவசாய அணியின் மாநில நிர்வாகிகளின் இக்கூட்டம் தனது மனமார்ந்த பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

“நீட்” நுழைவுத் தேர்வை அறிமுகப்படுத்திய போதிலிருந்தே, அது கிராமப்புற விவசாய மற்றும் விவசாயக்கூலி குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு எதிரானது என்று அறிக்கைகள், கண்டன ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள், கையெழுத்து இயக்கங்கள் ஆகியவற்றை தொடர்ந்து நடத்தி, அதனை எதிர்த்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் கூற்று மெய்பிக்கும் வகையில், அண்மையில் நடைபெற்ற “நீட்” தேர்வு குளறுபடிகளுக்கு தி.மு.க. விவசாய அணியின் இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது. அத்துடன், முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் “நீட்” நுழைவுத் தேர்வை நிரந்தரமாக ரத்து செய்திட வேண்டுமென ஒன்றிய பா.ஜ.க. அரசை கேட்டுக்கொள்கிறது.

வருகிற ஜூலை 10ஆம் தேதி அன்று நடைபெற விக்கிரவாண்டி சட்டப் பேரவை தொகுதி இடைத் தேர்தலில், தி.மு.க. விவசாய அணி நிர்வாகிகள் தீவிர பிரச்சாரத்தை மேற்கொண்டு, வெற்றிக்கனியை கழகத் தலைவர் அவர்களிடம் ஒப்படைத்திடும் அளவிற்கு தீவிர பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டுமென தி.மு.க. விவசாய அணியின் நிர்வாகிகளை யும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# சிவகங்கை நகராட்சியை சிறப்பு நிலை நகராட்சியாக அறிவித்திடுக!

## முதல்வருக்கு - நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை ஆனந்த் கோரிக்கை!

சிவகங்கை. ஜூன் 22-

சிவகங்கை நகர் மன்ற தலைவரும், சிவகங்கை நகர் கழக செயலாளருமான சி.எம்.துரை. ஆனந்த் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது:-

மாவட்ட தலைநகரான சிவகங்கை நகராட்சி 1965 ல் உருவானது. 1998ஆம் ஆண்டு முதல், முதல் நிலை நகராட்சியாக அறிவிக்கப் பட்டது. சிவகங்கை நகராட்சியில் மொத்தம் 27 வார்டுகள் உள்ளன. மாவட்ட தலைநகர் சிவகங்கை மற்றும் பல்வேறு சுற்றுப்புற கிராமங்கள் நகரங்களை ஒட்டி வளர்ந்து வருகிறது. நகரில் 60ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். கடந்த மூன்று ஆண்டில் 14 கோடியே 92 லட்சம் நகராட்சிக்கு வருமானம் வந்துள்ளது. நகர் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யவும் நகரில் பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ளவும் சிவகங்கை முதல்நிலை நகராட்சியாக உள்ளதை சிறப்பு நிலை நகராட்சியாக அறிவித்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக சிவகங்கை நகர்மன்றக் கூட்டத்தில் கடந்த 23.5.2022 ல் தீர்மானம் நிறைவேற்றப் பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் அவர்கள் மாவட்ட தலைநகர் சிவகங்கையை அங்கீகரிக்கும் வகையில் நடைபெற உள்ள சட்டமன்ற கூட்டத்தொடரில் சிறப்புநிலை நகராட்சியாக அறிவிப்பினை வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை. ஆனந்த் முதல்வருக்கு கோரிக்கை மனுவினை அனுப்பி உள்ளார்.



நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் வண்ணார்பேட்டை அப்னா பார்க் ஹோட்டலில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் ஒன்றிய, நகர, பேரூர், மாணவரணி பதவிகளுக்கான நேர்காணல் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல், மாவட்ட துணைச் செயலாளர் நம்பி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் மோகன், துணைச் செயலாளர் கோகுல் ஆகியோர் பங்கேற்று மாணவர் அணி பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நேர்காணல் நடத்தினர். நிகழ்வில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. கோவிந்தசாமி

### ஜூன் 22 (2002)



கழகம் தொடங்கிய நாளிலிருந்தே கழகத்தின் உறுப்பினராகப் பணியாற்றியவர்.

1959, 1964, 1968 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் தேர்தலில், மயிலை பகுதியிலிருந்து கழகச் சார்பில் தொடர்ந்து போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, துணை மேயராகவும் பொறுப்பு வகித்தவர்.

1962ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று, ஆறுமாதம் சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

அறிஞர் அண்ணா அவர்களால் ‘சாது’ கோவிந்தசாமி என்று செல்லமாக அழைக்கப்பட்டவர். தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் சுதந்திர பொன்விழா கேடயம் பெற்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.